செ.வெ. எண்: 137

12/2/2011

# செய்தி வெளியீடு – 12.2.2011

## சித்தா, யுனானி, ஆயுர்வேதம் மற்றும் ஓமியோபதி பரம்பரை மருத்துவர்களுக்காக நல வாரியம்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழ்நாட்டில் மொத்தம் 4 ஆயிரத்து 679 பரம்பரை சித்த வைத்தியர்கள், 2 ஆயிரத்து 745 ஆயுர்வேத பரம்பரை வைத்தியர்கள் மற்றும் 826 யுனானி பரம்பரை வைத்தியர்கள் மருத்துவ மன்றத்தில் பதிவு செய்துள்ளனர்.

தற்போது, பரம்பரை சித்த மருத்துவர்களுக்கான ஓய்வூதிய திட்டத்தின்படி மாவட்ட ஆட்சியரின் மூலமாக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் அரசு அங்கீகாரம் இல்லாமல் சித்த மருத்துவர்களாக உள்ளவர்கள் தங்களுக்கு வயது முதிர்ந்த நிலையில் அரசு ஆதரவு பெறும் வகையில், அமைப்பு சாராத் தொழிலாளர் என்ற முறையில் நல வாரியம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு அரசுக்கு கோரிக்கை வைத்தார்கள்.

தமிழகத்தில் பல்வேறு அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு பல நல வாரியங்களை அமைத்து பல்வேறு உதவித் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

பரம்பரை மருத்துவர்களின் இந்தக் கோரிக்கையை பரிவுடன் ஏற்றுக் கொண்டு தமிழகத்தில் பரம்பரையாகப் பணியாற்றிவரும் சித்தா, யுனானி, ஆயுர்வேதம் மற்றும் ஓமியோபதி மருத்துவர்களின் நலனுக்காக, நல வாரியம் ஒன்றை அமைத்து இன்று (12.2.2011) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஆணையிட்டுள்ளார்.

இந்த நல வாரியத்தில் பதிவு செய்யும் உறுப்பினர்களுக்கு உதவித் தொகைக்கும் மற்றும் நல வாரியத்தின் நிர்வாக செலவினத்திற்கும் உத்தேசமாக ஆண்டு ஒன்றுக்கு 5 கோடி ரூபாய் செலவாகும்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9